# சதமணி மாலை

43

சுவடியியல் பட்ட மேற்படிப்புப் பட்டயத்திற்காக
அளிக்கப்பெற்ற பதிப்பாய்வேடு

**இரா. திருவிக்கிரமன்,** எம். ஏ., எம். ஃபில்.,
பி. எட்., டிப். சம.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

சென்னை - 600 113.

மே - 1991

# சதமணி மாலை

சுவடியியல் பட்ட மேற்படிப்புப் பட்டயத்திற்காக
அளிக்கப்பெற்ற பதிப்பாய்வேடு

**இரா. திருவிக்கிரமன்,** எம். ஏ., எம். ஃபில்.,
பி. எட்., டிப். சம.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

சென்னை - 600 113.

மே - 1991

இரா. திருவிக்கிரமன், எம்.ஏ., எம். ஃபில்., பி. எட்., டிப். சம.,

கலவியியல் மாணவர்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

சென்னை - 600 113.

## உறுதி மொழி

சநமணி மாலை என்னும் பெயரிய இவ்வாய்வேடு கலவியியல் பட்டய மேற்படிப்புக்காகப் பதிப்புக்கப் பெற்றது. இப்பதிப்பாய்வேடு என் சொந்த முயற்சியில் உருவானதே என்று, இதற்குமுன் வேறு எந்தப் பட்டத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதி கூறுகிறேன்.

சென்னை - 600 113

நாள்: 3.06.'91.

R திருவிக்ரமன்

(இரா. திருவிக்கிரமன்)

முனைவர் பு. சுப்பிரமணியம்
சுவடி இயல் துறை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

## சான்றிதழ்

'சதயமணி மாலை' என்னும் இச்சுவடிப் பதிப்பாய்வு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 1990 - 91 ஆம். ஆண்டிற்கான சுவடியியல் பட்டயச் சான்றிதழ்த் தேர்வுக்காக திரு. இரா. திருவிக்ரமன், எம். ஏ., எம். ஃபில்., பி. எட்., டிப். சம., அவர்களால் உருவாக்கப் பெற்றது என்றும், இந்த ஆய்வின் மீது இவருக்கு வேறு எந்தப் பட்டமும் அளிக்கப் பெறவில்லை என்றும் சான்று வழங்குகிறேன்.

சென்னை - 600 113
நாள் : 3.06. '91.

3-6-91
நெறியாளர்.

## நன்றியுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆண்டு தோறும் நடத்தி வரும் சுவடியியல் பட்டய வகுப்பில் சேர்வதற்கு எனக்கு அனுமதியளித்த முன்னாள் இயக்குனர் டாக்டர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களுக்கு என் நன்றி. பட்டய வகுப்பின் ஆசிரியராக விளங்கி, ஆய்வு நெறிமுறைகளைக் கற்பித்து வழிகாட்டிய டாக்டர் பு. சுப்பிரமணியம் அவர்களுக்கு என் நன்றி. சுவடியியல் வகுப் பாசிரியர்களாக விளங்கி இத் துறையைத் தெளிவு படுத்திய டாக்டர் அனிதாமணி, டாக்டர் சிவகாமி, டாக்டர் சசிவல்லி, டாக்டர் மகாலட்சுமி ஆகியோருக்கு என் நன்றி.

இப்பட்டய வகுப்பிற்கும் பதிப்பாய்விற்கும் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய நூலகர்கட்கு என் நன்றி.

ஆய்வேட்டை நன்முறையில் தட்டச்சு செய்தற்கும் கட்டுதற்கும் வழிகாட்டித் துணை நின்ற திரு தி.மு. கந்தசாமி அவர்களுக்கு என் நன்றி. மற்றும், பல்லாற்றானும் இவ்வாய்வுக் காலத்தில் பெருதவியாய் நின்ற அனைவர்க்கும் என்றும் என் நன்றி உரித்து.

## பொருளடக்கம்


| பொருள் | பக்கங்கள் |
|---|---|
| பதிப்புரை | 1 - 7 |
| பொதுநிலை ஆய்வு | |
| சிற்றிலக்கியங்கள் | 8 - 13 |
| மாலை இலக்கியம் | 14 - 25 |
| சிறப்பு நிலை ஆய்வு | |
| ஆசிரியர் வரலாறு | 26 - 31 |
| நூலாய்வு | 32 - 39 |
| நூற்பொருள் | 40 - 71 |
| நூல் | 72 - 97 |
| துணைநூற் பட்டியல் | 98 - 99 |
| பின்னிணைப்பு | |
| சித்தாந்த சூத்திரங்கள் | 100 - 103 |
| சொல்லடைவு | 104 - 114 |

# பதிப்புரை

# பதிப்புரை

பழந்தமிழரின் பெருமைகளின் உறைக்களமாக விளங்குவன சுவடிகள். இப் பழந்தமிழ்ச் சுவடிகளைப் படித்தாய்ந்து, பதிப்பிப்பது என்பது ஒரு நுண்ணிய கலை. பண்டைத் தமிழரின் இலக்கியம், இலக்கணம், இசை, நாடகம், மருத்துவம், சோதிடம் முதலான பல்துறைகளிலும் பிறந்த நூல்கள் சுவடிகளிலேயே எழுதி வைக்கப் பெற்றன. இவை தலைமுறை தோறும் படியெடுத்தலின் வழியேயும் உரைகளின் மூலமும் பல்கிப் பெருகின.

சுவடிகள் நம் நாட்டில் மிகுதியாக வழங்குவதற்குரிய காரணங்களை ஆராய்வோமானால் அவை: 1. நம் நாடு வெப்பமண்டல நாடு. எனவே பனை மரங்கள் மிகுதியாக விளைகின்றன. 2. பனை ஓலைகளைச் சுவடிகளாகத் தயாரித்தல் எளிது. 3. அவற்றில் எழுதுதல் எளிது. 4. எடுத்துச் செல்லல் எளிது. 5. பாதுகாத்தல் எளிது.

என்றவாறு அமைகின்றன, பனையோலைகள் ஒருசில நூற்றாண்டுகளே நிலைக்கக் கூடியன. தட்பவெப்ப நிலை மாறுபாடுகள் மழை, வெயில் ஆகியவற்றாலும் இராம பாணம், கரையான் முதலிய பூச்சிகளாலும் செயற்கையாக அழிவுகள் நிகழ்கின்றன. இத்தகைய அழிவுகளின் காரணமாக நாம் இழந்த சுவடிகள் மிகப் பல. எஞ்சியுள்ள சுவடிகளைப் பதிப்பித்துப் பாதுகாத்தலின் வழி நம் பழந்தமிழ் இலக்கியங்கள் போற்றிப் பாதுகாக்கப் பெறும்.

அச்சுக்கலையின் வரவு ஏட்டுச் சுவடிகள் பலவற்றை அச்சு நூல்களாக்கி வாழ்வித்தது. உ.வே. சாமிநாதையர், வையாபுரிப்பிள்ளை, சி.வை. தாமோதரம் பிள்ளை ஆகியோர் தொடங்கிய பதிப்புப்பணியால் பல அரிய சுவடிகள் நூல் வடிவம் பெற்றன. அவ்வழியிலேயே 'சதமணி மாலை' என்ற இச்சுவடியும் நூல் வடிவம் பெறுகிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆண்டுதோறும் சுவடியியல் என்ற பட்டய வகுப்பை நடத்தி வருகின்றது. அவ்வகுப்பின் வழி ஆண்டுதோறும் பழந்தமிழ்ச் சுவடிகள் பல பதிப்பாய்வு செய்யப் பெறுகின்றன. அவ்வகையில் இவ்வாண்டு ஆய்வு செயப்பெறும் சுவடிகளில் ஒன்றாக இச் சதமணி மாலை ஆய்வாளரால் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

## சுவடி பற்றிய செய்திகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன சுவடித்துறை நூலகத்தில் 21-ஆம் எண்ணுள்ள சுவடியில் இந்நூல் அமைந்துள்ளது. 15 ஏடுகளைக் கொண்டதாக இச்சுவடி அமைந்துள்ளது. இதன் நீளம் 27 செ.மீ. அகலம் 3 செ. மீ, சுவடியின் இருபுறமும் மரச்சட்டம் உள்ளது. சுவடியை நன்கு கட்டுவதற்கேற்ப சுவடியின் நடுவில் இருபொத்தல்கள் உள்ளன. சுவடியின் ஏடுகள் ஓரம் சிதைந்தும் தேய்ந்தும் செல்லரிக்கப் பட்டுள்ளன. ஏடுகளின் மையத்திலும் ஆங்காங்கே பூச்சி அரிப்புகள் காணப்படுகின்றன. இத்தகைய குறைபாடுகளினால் சிற்சில எழுத்துகள் சிதைந்துள்ளன.

## அக அமைப்பு

நூலின் தொடக்கத்தில் சிவப்பிரகாச சுவாமிகள் கட்டளையிட்ட 'சதமணி மாலை' என்று நூலின் பெயர் சுட்டப் பெற்றுள்ளது.

## நூல் தொடக்கம்

நூலின் தொடக்கமாக திருச்சிற்றம்பலம் என்ற சைவம் சார்ந்த வணக்கத் தொடர் காணப்படுகிறது. மேலும், சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க' என்ற குரு வணக்கத் தொடர் இடம் பெற்றுள்ளது.

## நூல்

நூலுள் நூறு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பாடல்கள் யாவும் அடிகளோ சீர்களோ பிரிக்கப் பெறாமல் உரைநடை போன்றே இடையீடின்றித் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன. ஒரு பக்கத்திற்கு எட்டு வரிகள் இடம் பெற்றுள்ளன. பக்கத்திற்கு மூன்றிலிருந்து நான்கு பாடல்கள் வரை இடம் பெற்றுள்ளன. இவ்வாறு பதினைந்து ஏடுகளில் நூறு பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பண்டைத் தமிழ் முறையில் எண் கொடுக்கப்பெற்றுள்ளது. பாடலில் இடம் பெற்றுள்ள பொதுப்பொருண்மை அடிப்படையிலான குறிப்புத் தொடர் ஆங்காங்கே சுட்டப் பெற்றுள்ளன.

## யாப்பு

சதமணிமாலை எனும் நூல் செய்யுள் வடிவில் அமைந்தது. இதன்கண் இடம் பெற்றுள்ள பாடல்கள் யாவும் கலிவிருத்தம் ஆகிய பாவினங்களால் இயற்றப்பெற்றுள்ளன. இவற்றுள் கலிவிருத்தமே முதன்மையாக விளங்குகிறது. அறுபத்தொரு பாடல்கள் கலிவிருத்த யாப்பிலேயே அமைந்துள்ளன. பதினேழு பாடல்கள் கட்டளைக் கலித்துறை யாப்பில் ஆகியுள்ளன. அறுசீரான் இயன்ற ஆசிரிய விருத்த யாப்பின பிற. கடவுள் வணக்கச் செய்யுள் 'கன்னி' எனப் பெறும் ஈரடியாப்பினால் இயன்றது.

கலிவிருத்தமாவது அளவொத்த நாற்சீரடியான் அமைவது ஆகும். சான்றாக,

படைப்புறு பெ துகொல் பரம னாருயிர்க்
கடுத்துள பய றித் தைம்மு கங்களால்
எடுத்துரை தன விளிது னாயினை
நடக்குற கலை ஞான மென்பவே (4)

எனும் இப்பாடல் கலி விரு யாப்பினது.

கட்டளைக் கலித் யாவது. ஐஞ்சீரான் இயன்ற அளவொத்த நான்கடிகளால் ஆகியது. அடிதோறும் நேரசையாயின் 16, நிரையசையாயின் 17 எழுத்துக்களைப் பெற்றதாக அமைதல் வேண்டும். எனினும் இந்நூல்கண் இட பெற்றுள்ள கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் இவ்வாறு எழுத்துவரையறைக்கு உட்பட்டன வல்ல.

இல்லை ம்மல மென்துறை செய்வை யேவென்கொல்
சொல் போகமுற் றுந்துதல் சுத்த னாமென்னில்
அல்ல மப் போக மின்றவர்க் கெனவுரைவர்
புல்ல தம்பின மகன்றன நல்லி சைப்புலவர் (35)

எனும் பாடல் கட்டளைக் கலித்துறையாக அமைந்து விளங்குகிறது.

ஆசிரிய விருத்தமாவது ஐஞ்சீரின் மிக்க அடிகள் நான்கு அளவொத்து அமைவது ஆகும். அவை சீரின் எண்ணிக்கைக்கு ஏற்ப

அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

என்றவாறு பெயர் அமைப்பு பெறுகின்றன. இவற்றுள் அறுசீரான் இயன்ற ஆசிரிய விருத்தப் பாக்களே இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

பதியதிற் றாளந் தன்சீர்ப் பரையெனப் பட்ட சத்தி
முதிரொளிப் படிவ மாக மொழிந்தவச் சிதாகா சத்தில்
வதிர்வதிர்ப் பின்றி நின்று விளங்குமூர்த்தி மானாத்
துதிகொளப் பதிதா னென்பர் தோமிநூல் வாய்மை கண்டோர்
(9)

என்ற பாடல் அறுசீர் ஆசிரிய விருத்தப் பாவினதாகும்.

## எழுத்தமைப்பு

எழுத்துகள் படிக்கக் கூடியனவாக உள்ளன. முத்தெழுத்தான எழுத்துகளால் நூல் அழகு மிளிர எழுதப் பட்டுள்ளது. நூலின் இறுதிக் குறிப்பில் சூர்ப்பநகை எழுத்து என்ற குறிப்பு காணப்படுகிறது. சூர்ப்பநகை என்பது மயக்கும் எழில் கொண்ட நகை என்ற அடிப்படையில் அப்பற்களுக்கு உவமையாக விளங்கும் முத்துக்களைச்

சுட்டுகின்றது. முத்தான கையெழுத்து என்பது இதன் பொருள் (இதே அல்லாது நூலின் கையெழுத்தும் இவ்வுவமைக்கு ஏற்பவே அமைந்துள்ளது.)

இகர உயிர் வடிவம் கு என்றவாறு உள்ளது. ஈகார உயிர் வடிவம் Oπ0 என்ற வகையில் காணப்படுகிறது.

பிழைத்திருத்தம்
---------

நூலின் கண் எழுத்துப் பிழைகள் மற்றும் விடுகைகள் படியெழுத்தோராலேயே திருத்தம் செய்யப் பெற்றுள்ளன. அவ்வாறு திருத்தம் நிலையில் திருத்த எழுத்துகளை அவ்வச் சீருக்கு நேர்க் கீழேயே எழுதும் வழக்கு காணப்படுகிறது. மேலும் அவ்வாறு திருத்தத்துக்கு உட்படும் இடத்தில் '-' என்ற குறி பயன்படுத்தப் பட்டுள்ளது.

சான்று
----

பொழு‾ம் (18:1)

அறை‾வர் (40:4)

ஞானமான‾ற் ( :3)

சத மாலை ( உரை)

அன்றியும் சில இடங்களில் பிழைகள் நேர்ந்த விடத்து அப்பிழைகள் அடிக்கப் பெறாமலேயே திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. சான்று

யானைாய் - யாளை ய் (55:2)

உடராளும் - உடறா ம்

ரகர ஒற்றுக்கும் 'ர' என்ற துணை வெழுத்துக்கும் வேறுபாடு பேணப்படவில்லை. மேலும் ஐகார உயிர்மெய்த் துணை யெழுத்தாகிய 'ை' என்பது 'ஐ' என்றவாறு மயக்கந்தரும் வகையில் எழுதப்பட்டுள்ளது. ரகர றகர மயக்கங்களும் ஆங்கே காணப்படுகின்றன.

உடராளும் - உடறாளும் (91:4)

பவமறு - பவமரு (5:2)

'று' என்ற எழுத்து ஐ என்ற எழுத்தைப் போன்றே எழுதப்பட்டுள்ளதால் இரண்டுக்கும் இடையே மயக்கத்தன்மை நிலவுகின்றது.

மேலும், மறவடிவாம் எனும் சொல் 'மறவுறுவடிவாம்' என்றவாறு மிகை எழுத்துக்களோடு பிழையாகக் காணப்படுகிறது. (32:1)

'அன்பாமனன்றே', என்றவாறு நகர - னகர வேறுபாடுகளும் பிற வேறுபாடுகளும் ஆங்காங்கே காணக்கிடக்கின்றன.

தொடரோ வழி ஒற்றுமிகக் கூடாத இடங்களில் ஒற்று மிகுந்துள்ளது.

சாக்ஷி

பவுணர்தற்ச் சடர்வாள் என்ற தொடரில் றகர ஒற்று இடம் பெற்றுள்ளது. றகர வல்லொற்றை எழுத்து ஒற்று மிகுதல் கூடாது என்பது இலக்கண விதி. ஆனால் இங்கு, 'ற ் கர' ஒற்றை அடுத்துச் சகர ஒற்று மிகுந்துள்ளது.

ஒரொற்று மிக வேண்டிய இடத்தில் பிறிதோரொற்று இடம் பெறும் நிலையும் சிற்சில இடங்களில் காணப்படுகின்றன.

## சுவடிப் பதிப்பில் நிகழ்ந்தவை

செய்யுளில் அடி மற்றும் சீர்கள் முறைப்படிப் பிரிக்கப்பட்டு உரிய வடிவில் தரப்பட்டுள்ளன. நூலின்கண் ஆங்காங்கே காணப்பட்ட பிழைகள் திருத்தப் பெற்றுள்ளன. ற, ன, ண, முதலியவற்றிடம் ஆகார உயிர் மெய் வடிவம் இக்காலச் சீர்திருத்த எழுத்து முறைக்கேற்பத் துணை எழுத்துப் பிரித்து எழுதப்பட்டுள்ளன. அவ்வாறே ல, ள, ண, ன ஆகியவற்றுடன் ஐகார உயிர் மெய் வடிவங்களும் இக்காலச் சீர்திருத்த எழுத்து வடிவில் தரப்பட்டுள்ளன.

நூலின்கண் உரை மிகவும் முயன்று எழுதப்பட்டுள்ளது. கூடிய வரையில் பிழையின்றி எழுதப் பட்டுள்ளன. எனினும் இடம் முயற்சியில் ஏதேனும் சிறு குறைபாடுகள் காணின் பிழை பொறுத்தருள்க.

# பொது நிலை ஆய்வு

## சிற்றிலக்கியங்கள்

தொடர்நிலைச் செய்யுள், 'பொருள் தொடர்நிலை', 'சொல் தொடர்நிலை' என இரு வகைப்படும். அவற்றைத் தண்டியாசிரியர் மேலும் விளக்கியுள்ளார். பெருங்காப்பியமும் சிறுகாப்பியமுமா க வரும் நூல்களைப் பொருள் தொடர்நிலை' என்கிறார். அந்தாதி, கலம்பகம் போன்றவற்றைச் 'சொல் தொடர்நிலை' எனப் பகுத்துள்ளார். பொதுவாக நோக்கின் பெருங்காப்பியம் ஒழிந்தவற்றைச் 'சிறு காப்பியங்கள்', 'சிற்றிலக்கியங்கள்' எனக் கொள்ளலாம். சிற்றிலக்கியங்கள் பிரபந்தம் என்ற பெயராலேயே பெரிதும் வழங்கப் பட்டுள்ளன.

## பிரபந்தம் விளக்கம்

'பிரபந்தம்' என்பது 'நூல்' என்னும் பொருள் தரும் ஒரு வடசொல்; நன்றாகக் கட்டப்பட்டது என் து இதன் பொருள். தமிழில் வழங்கும் யாப்பு, செய்யுள் என்ப ும் இக் காரணம் பற்றிப் பிறந்த பெயர்களே.

தமிழில் 'நூல்' என்பது எல்லா வ நூல்களையும் சுட்டும் பொதுப்பெயராக இன்று வழங்கி வருகின்றது. ஆனால், பண்டை நாளில் இலக்கண நூல்களைச் சுட்டுவதற்கே நூ சொல் பயன்படுத்தப் பட்டது. இலக்கியம் என இப்பொழுது பேசப ம் நிலையில் உள்ளவற்றைச் 'செய்யுள்' என்று குறித்தனர்; 'ப டு' என்னும் பெயராலும் வழங்கப்பட்டது.

செய்யுள் என்பது தனித்தனிச் செய்யுள் வகைகளையும் குறிக்கும்; பல பாக்கள் கொண்ட இலக்கியத்தையும் உணர்த்தும், பல பாக்கள் கொண்ட இலக்கியம் 'தொடர்நிலைச் செய்யுள்' என்றும் வழங்கப்பட்டது. 'கணக்கு' என்றும் பெயராலும் இலக்கியம் என்பது சுட்டப்பட்டது.

<u>நிகண்டுகளில் சிற்றிலக்கியக் கொள்கை</u>

தமிழ் நிகண்டுகளுள் பழமையானது நூற்பாவினால் அமைந்த திவாகரம் இ.்.து 9-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இதில் வரும் சில சிற்றிலக்கிய மரபுகள் கவனிக்கத்தக்கன.

ஒலி பற்றிய பெயர்த் தொகுதியில், சிற்சில நூல் வகைகளின் விளக்கம் அமைந்திருத்தல் காணலாம். அவையாவன: சந்தப் பாட்டு, தாண்டகம், நெடுமொழி, உயர்மொழிக் காஞ்சி, முது மொழிக் காஞ்சி, பேயற்காஞ்சி, பொருள்மொழிக் காஞ்சி, முது பாலை, குரங்கனி, பாசறை முல்லை, இல்லாண்முல்லை, வள்ளைப் பாட்டு என்பனவாம்.

இந்த நிகண்டின் இறுதிப் பகுதியாகிய 'பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி'யில், ஆண்பாற் பிள்ளைப் பாட்டு, பெண்பாற் பிள்ளைப் பாட்டு என்பவற்றின் இயல்புகள் நன்கு சொல்லப்பட்டுள்ளன. காவிய இயற்கை பற்றியும் இத் தொகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி எனப்படும் நால்வகைக் கவிகளின் இயல்புகளைக் கூறுமிடத்து வித்தாரகவி பற்றிய விளக்கத்தில் மும்மணிக்கோவை முதலிய சிற்றிலக்கியங்களைத் திவாகரர் சுட்டியுள்ளார்.

> மும்மணிக் கோவையும் பன்மணி மாலையும்
> மறமும் கலிவெண் பாட்டும் மடலூர்ச்சியும்
> கிரீடையும் கூத்தும் பாசண்டத் துறையும்
> விருத்தக் கவிதையும் இயலிசை நாடகத்தொடு
> விரித்துப் பாடுவது வித்தார கவியே.

என்னும் திவாகரர் தரும் விளக்கத்தால், மும்மணிக்கோவை பன்மணிமாலை முதலிய பிரபந்தங்கள் அவர் காலத்திற்கு முன்பே இருந்தன என்பது தெளிவாம். தேவாரம், திவ்யப்பிரபந்தம் முதலிய பக்தி நூல்களில் சித்திர கவிகள், சந்தக் கவிகள் இடம் பெற்றுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாகச் சிலப்பதிகாரத்தில், வரிப் பாட்டு, குரவைப் பாட்டு, அம்மானைப் பாட்டு வகைகள் இடம் பெற்று மக்களிடையே அவை மிக்கு வழங்கியமையையும் தெரிவிக்கிறது. திவாகரர் தோன்றிய காலத்தை ஒட்டியே, பிரபந்த இயல்பு உரைக்கும் பாட்டியல் நூல்களும் பிறந்தன வாதல் வேண்டும். திவாகரத்திற்குப் பின்வந்த பிங்கல நிகண்டு முதலியவற்றிலும் இதுபோன்ற பிரபந்தம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

சிற்றிலக்கிய மரபு

புலவர் பெருமக்கள் எவ்வெவ் அடிப்படையில் எந்தெந்த முறைகளில் இலக்கியங்களை ஆக்கினார் என்பது கண்டால், அவர் படைத்த இலக்கிய வகைகளை நாம் இனம் பிரித்து அறிய்க் கூடும் வெவ்வேறு காலங்களில் புலவர் மரபாக வந்த இலக்கியக் கொள்கைகளும் அதன் வழி வெளிப்படும். இதற்குத் தொடர்நிலைச் செய்யுள் இலக்கணம் கூறும் நூல்களாகிய பாட்டியல் நூல்களைக் கால அடைவில் வைத்து ஆய்ந்து பார்க்கல் வேண்டும்.

பாட்டியல் நூல்கள்

வரலாற்று முறையில் ஆராய்ந்த அறிஞர்கள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டுத் தொடக்கமாக, தொடர்ச்சியாக வரும் பாட்டுகளின் இயல்புகளை எடுத்து விளக்கும் நூல்கள் தோன்றின என்று கருதுகின்றனர். இவ்வகையில் நமக்கு இப்பொழுது கிடைக்கும் பழைய நூல் கி.பி. பத்தாம் நூற்றாண்டளவில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் 'பன்னிரு பாட்டி'யலாகும்.

சிற்றிலக்கியம் தொண்ணூற்றாறு

சிற்றிலக்கியங்கள் 96 என்னும் வழக்கும் காணப்படுகிறது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் எழுந்த சிவந்தெழுந்த பல்லவன் உலாவில் தான் முதன்முதலாக

'. . . தொண்ணூற் றாறு
கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்'

என்று சுட்டப்பட்டிருக்கிறது.

'பிள்ளை கவிமுதல் புராணம் ஈறாத்
தொண்ணூற் றாறெனுந் தொகைதாம்'

எனப் பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியலும் கூறுகிறது. சைவதத்துவம் தொண்ணூற்றாறு என்பது போலப் பிரபந்தம் 96 என்னும் வழக்கும் எப்படியோ புகுந்துவிட்டது. சிலப்பதிகாரத்திலே 'பாசண்ட சாத்தன்' எனவரும் தொடரில் உள்ள பாசண்டம் என்பதற்குத் 'தொண்ணூற்றாறு வகைச் சமய சாத்திரக் கோவை' என்று பொருள் உரைக்கிறார் அடியார்க்கு நல்லார். சமய சாத்திரத் தருக்கக் கோவை 96 வகை என்பது போலப் பிரபந்தங்களும் 96 எனக் கொண்டனர் போலும்.

96 பிரபந்தங்களின் போக்கினைத் தெளிவாக உரைத்தவர் வீரமாமுனிவரேயாவர். இவர் 1838-இல் அச்சிட்டு வெளிப்படுத்திய 'தொன்னூல் விளக்கம்' செய்யுள் மரபியலில் 96 பிரபந்தங்கள் இவையிவை எனச் சுட்டி விளக்கியுள்ளார். இவரே பின்னர் தாம் இயற்றிய 'சதுரகராதி'யிலும் உரைநடையாய்ப் பிரபந்தம் 96-இன் இலக்கணம் தந்துள்ளார். 96 என்னும் முந்திய வழக்கிற்கு ஓர் உருக் கொடுத்து நடையாட விட்டவர் இம் முனிவரேயாவர்.

## தெய்வப் பாமாலை

தொண்ணூற்றாறு வகையாகப் பகுத்த பிரபந்தப் பாகுபாட்டிலும் தெய்வம் பற்றியவை மிகுதியேயாம். சிறப்பாக 'மாலை' என முடிவுறும் பிரபந்தங்களுள் பலவும் தெய்வப் பாமாலைகளேயாம்.

அங்கமாலை, இணைமணிமாலை, இரட்டைமணிமாலை, உற்பவ மாலை, காப்பு மாலை, நவமணிமாலை, நான்மணிமாலை, மணிமாலை, மும்மணிக்கோவை, மும்மணிமாலை, வருக்க மாலை முதலியன தெய்வப் பாமாலைகளே. இவற்றுள் குறிக்கப்பட்ட மணிகள் பாமணிகளே. பல்வேறு பாக்களையும் கலந்து கோப்பதனால் அவற்றிற்கு வெவ்வேறு பெயர்கள் அமைகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இடைக்காலம் என்று குறிப்பிடப்படும் காலக்கட்டம் சிற்றிலக்கியங்களின் செல்வாக்கு மிகுந்ததாகும். ஈண்டு 'சிறு' என்னும் அடைமொழி அடிவரையறையைக் கருத்திற் கொண்டு அமைந்ததேயாம். பன்னீராயிரம் பாடி கம்பன் போன்றோரின் இலக்கியங்களுக்கு மத்தியில் சில நூறு பாடல்களுக்குள் அமைந்த இலக்கியங்கள் இந்நோக்கிலேயே சிற்றிலக்கியங்கள் எனப்பட்டன.

அளவிற் சிறுத்த இவை பொருளடக்கத்திலும் ஓசை நயத்திலும் சிறந்து விளங்கின. குறிப்பாக சிற் றிலக்கியங்களின் சந்தங்கள் பல சிறந்தனவாகவும் சுவை பயப்பனவாகவும் விளங்குகின்றன.

சிற்றிலக்கியங்கள்

தொண்ணூற்றாறு என்ற வரையறை

சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்று பிற்காலத்தில் உருவான பாட்டியல்கள் காட்டும்.

பன்னிரு பாட்டியல் 62

வெண்பா பாட்டியல் 55

நவநீத பாட்டியல் 53

சிதம்பர பாட்டியல் 63

முத்து வீரியப் பாட்டியல் 90

பிரபந்த மரபியல் 96

பிரபந்த தீபிகை 96

சதுரகராதி 96

தொன்னூல் விளக்கம் 96

என்பன பாட்டியல்களும் அவைகாட்டும் சிற்றிலக்கிய நூல்களின் எண்ணிக்கையாகும்.

பிரபந்த மரபியல் தான் முதன்முதலாக தொண்ணூற்றாறு என்ற வரையறையைக் காட்டுகின்றது. மற்றவற்றின் காலமும் கி.பி. பதினெட்டுக்குப் பிறகுதான். சில பத்தொன்பதின் தொடக்கத்திலும் தோன்றியுள்ளன ஆனால் அந்த நிலையானது

"தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள்
கொண்டபிரான்"

என்று பதினேழாம் நூற்றாண்டு இலக்கியத்திலேயே இடம் பெற்றுவிட்டது.

தொண்ணூற்றாறு என்ற வரையறை பொருந்துமா?

தொண்ணூற்றாறு என்ற வரையறை அவ்வளவு சரியானதாகத் தெரியவில்லை. இதற்கான காரணங்கள் நான்கு என்று கூறலாம்.

1. வகைப்பாட்டில் சிக்கல்கள் ஏற்பட்டு, நூல்களுக்குள்ளும் தமக்குள்ளேயே மாற்றங்கள் நடைபெறுகின்றன.
2. தொண்ணூற்றாறுக்குள் அடங்காத பல நூல்களுக்குப் பாட்டியல் நூல்கள் இலக்கணம் கூறுகின்றன.
3. தொண்ணூற்றாறுக்குள் அடக்கப்பட்டும் பலவற்றிற்கு பாட்டியல் இலக்கணங்கள் இலக்கணம் கூறவில்லை
4. தொண்ணூற்றாறுக்கு மேற்பட்ட பல நூல்கள் இன்று தோன்றி நிலைபெற்றும் விட்டன.

இதே காரணங்களை முன்னிறுத்திப் பார்க்கும்போது பாட்டியல் கூறும் தொண்ணூற்றாறு என்ற வரையறைப் பொருந்தாது என்பது உறுதியாகி விட்ட ஒன்றாகி விட்டது.

## மாலை இலக்கியம்

இச்சிற்றிலக்கியத் இலக்கிய வகைகளுள் மாலை இலக்கிய வகையும் ஒன்று.

பூமாலை கொண்டு கடவுட் திருமேனியிற் புனைவது போல அன்பர்கள் பாமாலை சூட்டிப் பரமனை வழிபடுதல் வழிவழி வந்தமரபாகும் இதனை,

"தொடுக்கும் கடவுட் பழம்பாடல்"

"கோதை சொல்லும் தூய தமிழ் மாலை"

"பாமாலை கொண்ட திருவெங்கை வாணர்"

என்னும் தொடர்களால் அறியலாம்.

மலர்கள் கோத்துத் தொடுக்கப்பட்டதை மாலை என்கிறோம். அதுபோல, சொற்களைக் கோத்துத் தொடுக்கப்பட்டவையே மாலை வகை இலக்கியங்களாகும்.

பாட்டியல் நூற்கள், பொருள், யாப்பு, எண்ணிக்கை போன்ற அடிப்படைகளில் மாலை நூல்களை வகைப்படுத்தித் தருகின்றன. பொருளும் வடிவும் வேறுபடுவனமாலை என்ற பெயர் நிலையில் ஒப்புமைப்படுகின்றன.

## பொருள் நிலை மாலைகள்

நாமமாலை, புகழ்ச்சி மாலை, பெருமகிழ்ச்சி மாலை தாரகை மாலை, செந்தமிழ் மாலை, அங்க மாலை, தானை மாலை அநுவாத மாலை போன்றன பொருள்நிலை மாலைகளாகத் திகழ்கின்றன.

மேலும், வெட்சி மாலை, கரந்தை மாலை, வஞ்சி மாலை வாகை மாலை போன்றன புறத்திணை பற்றியமைந்த புறப்பொருள் மாலைகளாம்.

## யாப்புநிலை மாலை

வெண்பா மாலை, வஞ்சி மாலை போன்றன யாப்பு நிலையால் பெயர் பெற்ற மாலை இலக்கியங்களாகும்.

## எண்ணிக்கை நிலை மாலை

யாப்பு விரவு நிலையில் இணைமணி மாலை, இரட்டை மணி மாலை, நவமணி மாலை, போன்றன எண்ணிக்கை அடிப்படையில் அமைந்த மாலைகள்.

## பாட்டியல் காட்டும் மாலை

பன்மணி மாலை, இரட்டை மணிமாலை இணைமணிமாலை, உருக்கமாலை, மும்மணி மாலை, நான்மணிமாலை, நவமணிமாலை, பல்சந்தமாலை, அங்க மாலை, மகிழ்ச்சி மாலை, நாமமாலை, கைக்கிளை மாலை,

அநுராக மாலை, தானைமாலை, வஞ்சி போன்ற ஐ மாலைகள், தாரகை மாலை, காப்பு மாலை, கோயில் மாலை, மணி மாலை, மெய்க் கீர்த்தி மாலை, வேனில் மாலை கலம்பக மாலை, செந்தமிழ் மாலை, போன்ற முப்பதுக்கு மேற்பட்ட மாலைகளைப் பட்டியல் போட்டு அவற்றிற்கான இலக்கணங்களைக் காட்டி நிற்கின்றன பாட்டியல் நூல்கள் இந்த மாலைகள் பட்டியல் எல்லா பாட்டியல் நூல்களிலும் ஒத்தப்பட்ட ஒன்றாகும்.

## மாலை வகைகளும் இலக்கணங்களும்

மாலை வகைகளைக் காட்டி அவற்றிற்கான இலக்கணங்களைக் காண்போம். அவற்றை அகர முறையில் காண்பது வகைப்பாட்டிற்கு எளிதெனக் கருதி அவ்வாறு செய்துள்ளேன்.

## அங்க மாலை

பாட எடுத்துக்கொண்ட பொருள் பெயர்கள் அங்க வகையை விளம்புவன விருத்த யாப்பு வழி வெண்டுறை - வாழ்த்துவது அங்க மாலை என்று அழைக்கப்படும்.

## அநுராக மாலை

பாங்கற் கூட்டம் புணர்ந்த தலைவன் கனவின் இன்பத்தை எடுத்துக்காட்டுவது அநுராக மாலை எனப்படும்.

## இணைமணி மாலை

வெண்பாவும், கலித்துறையும் தம்முள் இயைந்து வர அந்தாதியாய் நூறு பாடல்கள் கொண்டு பாடுவது இணைமணி மாலை எனப்படும்.

## இரட்டை மணிமாலை

வெண்பா முன்னாகவும் கலித்துறை பின்பாகவும் அமைய, அந்தாதித் தொடை அமையப்பெற்றதாய் இருபது பாடல்கள் கொண்டது இரட்டை மணிமாலை என்று அழைக்கப்படும்.

## கலம்பக மாலை

முதலில் வரும் ஒருபோகும், அம்மானையும் நீக்கி மற்ற உறுப்புகளை புகுந்த அந்தாதித் தொடை அமையப் பாடுவது கலம்பக மாலை என்பர்.

## கரந்தை மாலை

நிரைகொள்ளும் வெட்சியாரைத் தவிர்க்கும் பண்பூரிதல் கரந்தை மாலை எனப்படும்.

## காஞ்சி மாலை

மாற்றார் பால் செல்லும் வஞ்சித்திணையைத் எதிர்த்து நிற்றல் காஞ்சி என்று உரைக்கப்படும்.

## காப்பு மாலை

வெண்பாவும், கலிப்பாவும் அமைய இருபது பாடல்களில் தன்னைக் காக்குமாறு வேண்டிப் பாடுவது காப்புமாலை என்றழைக்கப்படும்.

## கைக்கிளை மாலை

ஆடவரும், மகளிரும், வருந்தும்படி வருகின்ற அறிவு மயக்கத்திற்குக் காரணமாகிய, ஒருதலைக் காமமாகிய பொருள் பற்றிப் பாடப்படும் இலக்கிய வகையாகும்.

## கோயில் மாலை

வெண்பாக்கலித்துறை அமைய இறைவனையோ, அல்லது இறைவன் தலங்களையோ சிறப்பித்துப் பாடுவது.

## செந்தமிழ் மாலை

எந்தப் பொருளைப் பற்றியும் இருபத்தேழு பாடல்களைக் கொண்டு பாடப்படுவது செந்தமிழ் மாலை எனப் பெயர் பெறும்.

## தாரகை மாலை

தாரகை இருபத்தேழும், சொல்லணியில், வைத்துப்பாடுவது தாரகை மாலை எனப்படும்.

## தானை மாலை

தானையின், நிலை அளவு, பெருமை சிறப்பு போன்ற பலவற்றை விரித்துப் பாடுவது தானை மாலை எனப்படும்.

## தும்பை மாலை

வெண்பா முன்பாக, கலித்துறை பின்பாக அந்தாதியாய் இருபது பாடல்கள் அமையப்பாடுவது, அதில் போரிடுதல் நிலைமை பற்றிப் பேசுவது தும்பை மாலையாகும்.

## நவமணி மாலை

நால்வகைப் பாக்களும் மேலையானவும் பிற வினங்களும் கலந்து பாடப்படும். ஒன்பது பாடல்கள் நவமணி மாலை என்றழைக்கப்படும்.

## நாமமாலை

எழுத்து, அசை, பா, பாவினம் போன்றவற்றில் மயக்கமடைந்த அடிகளில் புகழைப்பாடுவது நாமமாலை எனப்படும். வெண்பாவைச் சிறப்பித்துப் பாடுவது புகழ்ச்சி மாலை எனப்படும்.

## நான்மணி மாலை

வெண்பா, கலித்துறை, ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம் ஆகியன கலந்த நாற்பது பாடல்களை அந்தாதியாய்ப் பாடுவது நான்மணி மாலை என்றழைக்கப்படும்.

## பல்சந்த மாலை

கலம்பகத்தில் சொல்லப்பட்ட உறுப்பு வகைகளை நீக்கிப் பல்வகை நிலையிலமைந்த சந்தங்களால் பத்துப் பத்துப் பாடல்கள் நூறு அமையப்பாடுவது பல சந்த மாலை எனப்படும்.

## பன்மணி மாலை

பலவகையான பாக்களால், வெண்பாவும் கலித்துறையும் அமைய நூறு பாடல்களால் பாடுவது பன்மணிமாலை என்றழைக்கப்படும்.

## பாடாண் மாலை

பாடப்படுகின்ற ஆண் மகனின் வெற்றி, கொடை, வீரம் போன்ற பண்புகளைப் புகழ்ந்து பாடுவது பாடாண் மாலை எனப்படும்.

## மணிமாலை

நால்வகைப்பா, பலவகையான பாவினம் அமைய நூறு பாடல்கள் பாடுவது மணிமாலை என்று பெயர் பெறும்

## மகிழ்ச்சி மாலை

மகிழ்ச்சி நிலையை விவரித்து, நாற்பது பாடல்களில், வெண்பா, கலித்துறை இடம் பெறப்பாடுவது மகிழ்ச்சி மாலை எனப்படும்

## மும்மணி மாலை

வெண்பா, கலித்துறை, ஆசிரிய விருத்தம் மூன்றும் கொண்டு அந்தாதி அமைப்பில் முப்பது பாடல்களால் பாடப்படுவது மும்மணி மாலையாகும்.

## மெய்க்கீர்த்தி மாலை

நான்கு சீர்கள் உடைய அடிகளால், இரண்டடித் தொடைகளால் மன்னவனது புகழ் எல்லாவற்றையும் சொல்லி இறுதியில் அவனை வரலாறு போன்றவாறு கூறி அவனது தேவியை வாழ்க என்று சொல்லி அம்மன்னன் சிறப்புகளைக் கூறி வாழ்த்துவது மெய்க்கீர்த்தி மாலை எனப்படும்.

## வஞ்சி மாலை

மாற்றான் மீது படையெடுத்துச் சென்று தாக்குதலைப் பாடுவது வஞ்சி மாலை எனப்படும்.

## வருக்க மாலை

உயிர் பன்னிரண்டு, மெய் மொழி முதல் எழு அமையப் பாடப்படுவது வருக்க மாலை எனப்படும்.

## வாகை மாலை

போர்க்களத்தில் படையெடுத்துச் சென்று வாகை சூடுதலைப் பாடுவது வாகை மாலை எனப்படும்.

## பிற மாலைகள்

பாட்டியல் கூறும் இப்பல்வகை மாலைகள் போன்றே தமிழிலக்கியத் தொகுதியுள் மேலும் பலவகையுள்ள மாலைகள் காணப்படுகின்றன. பக்தி மாலையும், புகழ் மாலையும் தமிழில் மிகுதியாகவுள்ளன.

அல்லி அரசாணி மாலை, புலந்திரன் களவு மாலை போன்ற கதைப்பாடல்களும் மாலை என்னும் பெயரினதாய் இலங்குகின்றன.

அணிநிலை பொருந்திய மாலைகளாகச் சிலேடை மாலை, அந்தாதி மாலை, சித்திரகவி மாலை போன்றனவும் அமைகின்றன.

## மாலைக் காலம்

மாலை என்னும் பெயரினதாய் விளங்கும் முதனூல் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திணைமாலை நூற்றைம்பதாகும். எனினும் சிற்றிலக்கிய வகைமையில் தோன்றிய முதல் மாலை காரைக்காலம்மையாரால் பாடப்பட்ட இரட்டை மணி மாலையாகும். இதன்காலம் கி.பி. 5,6 ஆம் நூற்றாண்டாகும். வருக்க மாலை என்னும் பழைய நூல் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. எவ்வடிப்படையில்

அமைந்த பல நான்மணி மாலைகளுள் மிகவும் பழைமையானது 10-ஆம் நூற்றாண்டில் பட்டினத்தார் பாடிய கோயில் நான்மணி மாலை. இதன் பின்னர் பல்வேறு மாலைகள் பல்கிப் பெருகின.

## மணிமாலை

மலர்மாலை, முத்துமாலை, மணிமாலை, இரத்தின மாலை, வைரமாலை என மாலைகள் பலவகையின உள்ளன. இவற்றுள் மணிமாலை சிறந்ததாகும். மன்னர் முதலியோர் இதனை அணியும் பெற்றியராய்த் திகழ்ந்தனர். மேலும் நன்னூலார் 'ஒத்து' என்னும் யாப்பு வகை பற்றிக் கூறுங்கால்

நேரிய மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை ஒருபுடை வைத்தல் ஒத்
ஒத்தென மொழி உயர்மொழிப் புலவர்.

(பவணந்தி முனிவர் நன்னூல் காண்டிகை பாயிரம்
நூ. 16, கழக வெளியீடு 1972)

என்பார் உயர்ந்தவற்றையே உவமையாகச் சொல்லும் பாங்கின் அடிப்படையில் மணிமாலையே உயர்ந்ததென்று அறியலாம்.

இக்காரணம் பற்றியே கோவை மாலை முதலிய இலக்கியங்களைப் பாடுங்கால், மும்மணிக்கோவை, நான்மணி மாலை எனப் பெயரிட்டழைத்தனர்.

# சிறப்பு நிலை ஆய்வு

## ஆசிரியர் வரலாறு

பதினேழாம் நூற்றாண்டில் செல்வ மதுரம் சேர்ந்த நற்பொருளில் சீரிய கூறிய செந்தமிழ்ப் புலவர் இருவர். ஊமைப் பிள்ளையிருந்து உமையாள் மைந்தனின் அருளால் பேசிய குமரகுருபரர் ஒருவர். சான்றோருடைத்தான தொண்டை மண்டலத்தில் தோன்றிக் கவிக்கடலாகத் திகழ்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் மற்றொருவர்.

ஐம்பூதத் தலங்களுள் ஒன்றான மண்தலம் என்று போற்றப்படும் கச்சியம் பதியில் குமாரசாமிப் பண்டாரத்தின் பிள்ளையார் சிவப்பிரகாசர் பிறந்தார்.

இளமையிலேயே தந்தையை இழந்த இவர் இலிங்க தாரணம் செய்த வீர சைவரானார். திருவண்ணாமலையில் குருதேவர் என்பாரிடம் தமிழ் கற்றார். சோணாசல மாலை பாடினார்.

திருநெல்வேலி சென்று சிந்துபூந்துறையில் வாழ்ந்த தருமையாதீன வெள்ளியம்பலத் தம்பிரானிடம் பாடம்கேட்கச் சென்றார். இவருடைய தகுதியுரைத் தம்பிரான், முதலில் 'கு' இடையில் 'ஊருடையான்' முடிவில் 'கு' வர வெண்பா பாடுமாறு பணிக்க சிவப்பிரகாசரும்,

> குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
> முடக்கோடு முன்னமணி வார்க்கு - வடக்கோடு
> தேருடையான் றெவ்வுக்குத் தில்லைகோன் மேற்கொள்ள
> ஊருடையான் என்று முறை.

ணைப் பாடினார். இப்பாடலைக் கேட்டு மகிழ்ந்த தம்பிரான், மெத்த பாராட்டி மாணவராக ஏற்றுக் கொண்டார்.

காணிக்கையாகத், தம்மை மதியாது தருக்கித்திரியும் புலவரொருவரை வென்று வருமாறு கேட்டார். சிவப்பிரகாசர் திருச்செந்தூர் சென்று அப்புலவரைப் போட்டிக் கழைத்து நிரோட்ட யமக வந்தாதி பாடி முடித்தார்.

வாயின் இதழ் குவியாமல் (ம, ப, வ என்னும் எழுத்துகளைத் தவிர்த்து) பாடுவது நிரோட்டகம். "முதலெழுத்து தவிர மற்றெல்லாம் ஒன்றிவரப் பாடுவது யமகம்". "அந்தம் முதலாகத் தொடுப்பது அந்தாதி". இம்மூன்று இலக்கணங்களையும் பெற்றது நிரோட்டக யமக வந்தாதி.

திருச்செந்தூர் முருகக் கடவுள் மீது "நிரோட்டக யமக அந்தாதி" முப்பது கட்டளைக் கலித்துறையால் பாடி முடித்தார். அப்புலவரோ ஒரு செய்யுளேனும் பாட முடியாமையை உணர்ந்து சிவப்பிரகாசரை வணங்கி விண்ணப்பம் செய்ய, அவரை துணித்திற்கு அழைத்து வந்து தம்பிரான் சுவாமிகளுக்கு அடிமையாக்கி விட்டார்.

துறை மங்கலம் திரும்பிய சிவப்பிரகாசர் அண்ணாமலை ரெட்டியாருக்கு அருள் புரிந்து அவர் திருவெங்கை நகரில் தமக்காக அமைத்துதவிய திரு மடத்தில் வீற்றிருந்து அப்பதிப் பழமலைநாதர் மீது திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கை உலா, திருவெங்கை அலங்காரம் என்னும் நான்கு நூல்களை இயற்றினார்.

தம் நண்பர் அண்ணாமலை ரெட்டியாருடன் சிதம்பரத்திற்கு எழுந்தருளி. அங்கே ஒரு திருமடம் கட்டுவித்து அதிலிருந்து கத்த பிரானை வழிபட்டுக் கொண்டு சிவப்பிரகாசர் விகாசம், தருக்கபரிபாடை சதமணிமாலை, நால்வர் நான்மணிமாலை ஆகிய நூல்களை இயற்றினார். காஞ்சியரி, பிரபுலிங்கலீலை, வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி, திருத்தனியக் பழமலை அந்தாதி, பிச்சாடன நவமணிமாலை, கொச்சகக் கலிப்பா, பெரிய நாயகியம்மை விருத்தம், பெரிய நாயகியம்மை கலித்துறை நல்லாற் நூல் அஷ்டக மாலை, நெடுங்கழிநெடில், நிரஞ்சனமாலை, கைத்தல மாலை, பாடினார். இவ்வாறாகக் கிட்டத்தட்ட 34 நூல்களை இயற்றியுள்ளார்.

இவர்தம் இலக்கியப் பணிகளில் ஏற்றமுடையதாக விளங்குவது பிரபுலிங்கலீலை கற்பனை நயமும் சொற்பொருள் நலமும் மிக்கது.

நீதிநூல் வரிசையில் வைத்துப் போற்றத்தக்கதாக நன்னெறி எனும் நூல் விளங்குகிறது.

வீரமாமுனிவர் கிறித்தவத்தின் பெருமை கூறிப்பலரைத் தம் மதத்தில் ஈர்த்துச் சேர்த்த நிலை கண்டு வெகுண்டு அவரைக் கண்டிக்குமாற்றான் ஏசுமத நிராகரணம் பாடினார். பல தனிப் பாடல்களும் பாடினார்.

இவருடைய நூல்கள் சித்தாந்தம் வடமொழி, ஆகமம், தருக்கம், காவியம், வேதாந்தம், அகப்பொருள், சோதிடம் எனும் பல திறத்தன புத்தம் புதிய கருத்துகள் விழுமிய இவ்வோசை திருமுறையமுது கொண்டொளிர்வன.

சைவநேசச் செல்வராகச் சில நாள் வாழ்ந்த தம் முப்பத்தி இரண்டாம் ~~பிரண்டாம்~~ யாண்டில் கன்னித்திங்கள் நிறையுவா நாளில் பரசிவலிங்கத் தில் கலந்தருளினார்.

"சீர்கொள் சங்கத் தமிழ்க் குழுவிற்கொரு
செம்மை என்ற சிவப்பிரகாசமே"

எனும் மொழிக்கிணங்க இவர் வாழ்ந்த பெருவாழ்வு, தமிழும் சைவமும் கலந்த திருவாழ்வாகும். இவ்விரண்டும் உள்ளவரை இவர் பெயர் நிலைபெற்றிலங்கும்.

சதமணி மாலையை இயற்றியவர் இச் சிவப்பிரகாசரே என்பதை நூலின் கண் காணும் அகச் சான்று உறுதி படுத்துகின்றது. நூலின் நூறாவது பாவான இறுதிப் பாடல் "இக் குற்றமற்ற சதமணி

மாலையை உலகம் விரும்பும் வண்ணம்
புகன்று உரைத்தவன் சங்கம் தோற்றிய
தமிழ் மொழியாகிய குழுவிற்குச் செம்மை
என விளங்கும் சிவப்பிரகாசன் ஆவான்.

என்று குறிப்பிடுகின்றது.

## காலம்

முப்பத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்து[1] தமிழுக்கும் வீர சைவ சமயத்துக்கும் தொண்டு புரிந்த இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டு எனலாம்[2]. இலக்கிய வரலாற்றாசிரியரான பூர்ணலிங்கம் பிள்ளை மடங்களின் காலப் பகுதியில் (1350 - 1600) திருமங்கலம் வீரசைவ மடத்தின் வரலாற்றில் இவரையும் கூறுகிறாரேயன்றி கால நிர்ணயித்தற்கு சிவப்பிரகாசரைப் பற்றிக் குறிப்பிடும் போது அடைப்புக் குறிக்குள் 1652' என்ற ஆண்டைத் தருகின்றார்.[4] சுவாமிகள் பிறந்த ஆண்டாகவோ அன்றி வாழ்ந்த காலமாகவோ இதனைத் தருகின்றார் என விளக்கவில்லை.

சுவாமிகள் பாடிய திருவெங்கைக் கோயில், சாலிவாகன சகாப்தம் 1545 ஆம் வருடம் (கி.பி. 1623) கட்டப்பட்டது என்பதால் அவர் அங்கு வாழ்ந்தகாலம் இதற்குப் பிற்பட்டது எனத் துணியலாம். அடிகளியற்றிய பதினாறாவது நூலான பிரபுலிங்க லீலையின் காலத்தைத் துணிய,

பார்கெழு சகாத்த மூவைஞ் நூற்றெழு பானான் காவ
தாங்கு கர நாமங்கொ ளாண்டுறு தை ஞாயிற்றிற்
சீர்கெழு மல்ல மன்றல் திருவிளை யாடற் காதை
கார்கெழு குடந்தைக் கோமான் கருணை கொண்டியம்பி னானே

(பிரபு - மான்மிய - 23)

என்ற பாடல் உதவுகின்றது.

அந்தமயின் ஈற்றில் நூற்பயனும், காலமும், வாழ்த்துமாகி வரும் பகுதியில் இப்பாடலும் இடம் பெறுகின்றது. 1574 என்ற இதன் ஆண்டு கி.பி. 1652ஐக் குறிக்கின்றது. எனவே கவிஞரின் வாழ்வுக் காலத்தில் இவ் ஆண்டும் உட்படுகின்றது. பொதுவாக, இவர் காலத்தைப் பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என இக் குறிப்புகளிலிருந்து தேர்ந்து கொள்ளலாம். ஆயின், ஏசுமத நிராகரணம் என்ற இவரது நூல், வீரமாமுனிவரை மறுத்து எழுதப்பட்டது என்பதால், முனிவர் இங்கு வாழ்ந்த காலமான பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கமும் (1711 - 1747) இவர் வாழ்க்கைப் பகுதியாக, கால எல்லை வரையறுக்க இயலாத சிக்கலைத் தருகின்றது.

சுவடி - காலம்

சுவடியின் கண் இறுதிக்குறிப்பு இந்நூலைப் படியெடுத்த ஆண்டு ஸ்ரீமுக வருடம் பங்குனி மாதம் 25 ஆம் தேதி ஆதிவாரம் சதுர்த்தசி திதி என்று குறிப்பிடுகின்றது. எனவே, இச்சுவடி எழுதி முடிக்கப் பெற்ற நாள் 1873 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7தேதி என்பது தெளிவு. இச்சுவடியைப் படி எடுத்தவர் காஞ்சிபுரம் புள்ளை பாளைய மகாவீர சுவாமிகள் என்பது உரைக்குறிப்பால் பெறப்படுகின்றது.

## நூல் ஆய்வு

உலக உயிர்கள் யாவும் இன்பத்தையே நாடுவன. அவ்வின்பத்தைப் பெற அவ்வுயிர்கள் மேற்கொள்ளும் வழிமுறைகள் பல. அவ்வழிகள் யாவும் அவரவர் அறிவு நிலைக்கேற்பவே அமைகின்றன. அவையே சமயங்கள் எனப்படுகின்றன. ஒவ்வொரு சமயமும் தமக்கெனத் தனியொரு உண்மையைப் பொருண்மையாகக் கொண்டிலங்கும். பதி, பசு, பாசம் என்கிற மூன்றுமே சமயங்களால் பேசப் பெறும் முத்தத்துவங்கள். இம்மூன்றின் உண்மையையும் இலக்கணத்தையும் எடுத்தியம்பி முடிவாக, தருக்க நெறியில் ஆய்ந்து உயிர் பெறுதற்குரிய இன்பத்தின் உயர் நிலை, அதற்குத் தடையாக இருக்கின்ற உலக இயற்கை ஆகியவற்றை விளக்கி அவ்வின்பத்தைப் பெறுதற்குரிய கருவிகளை எடுத்தியம்புவது சைவ சமய நெறியாகும்.

சைவ சமயத்தின் கடவுள் சிவன் ஆவான். இச்சைவம் இறைவனை உண்டுடையது. எனவே, சிவன் தொடர்பாகவே சைவம் எனப் பெயர்பெற்று வழங்குகின்றது. இச்சமயம் கூறுகின்ற உயிர்க்குறுதியான தெளி பொருள்களே சித்தாந்தம் எனப் பெறுகின்றன. சைவ சித்தாந்தத்தைத் தெளிவுறுத்துகின்ற ஆன்ம நூல்களும் சாத்திரங்களும் தோத்திரங்களும் மிகப் பல. தேவாரம் முதலாக

விளங்கும் பன்னிரு திருமுறைகளும் தோத்திரப் பாக்களாக அமைந்து சைவத்தை நன்கு விளக்குகின்றன. அவ்வாறே சிவஞான போதம், சிவஞான சித்தியார், சித்தாந்த அட்டலம், திருவருட் பயன் முதலான சாத்திர நூல்கள் சைவ சித்தாந்தத்தையே பொருளாகக் கொண்டவை அவ்வகையில் சைவ சமயத்தில் ஆகம நூல்கள் பற்பல. அவற்றுள் ஆய்ந்து அரிய உண்மைகளைத் தொகுத்து உரைக்கப் பெற்ற நூலே சதமணி மாலை ஆகும் இதனை,

"பரம நூல்கள் பலவுநேர் தேர்ந்துதேர்ந்
தருமை ஞான மறியத் திரட்டிய
பெருமை நூலின் பெரும்பொருள் கொள்ளவெங்
கருமந் தானதி காரிய லானரோ"

என்ற பாடலான் அறியலாம்.

மேலும் நூலின் சுண் ஆங்காங்கே, மறையோடாமை நூல் வல்லோர் (14:4)

தகவுணர்க வென விளம்புஞ் சைவ மெனப்படு நூலே (20:4)

ஆகம நூனெறி கண்டார் (22:4)

சைவ தந்திர முணர்ந்திருப்போர் (38:4)

முச்சுடர் விழியுடை முதல்வ னாகமம் (48:4)

பாகுமென் மொழியமர் பாக னாகமம் (54:4)

~~செர்சமனாய் பகவனூலே~~ செஞ்சடை பரன்நூலே (74:4)

அப்பர னருளிய ஆக மங்களே (76:4)

அரவணி கடவு ளால் அறையு மெய்யவே (85:4)

என்ற வழி சைவ ஆகமங்கள் மற்றும் அவ்வாகம நெறி நின்றோர் வழியே இந்நூல் உருவானது என்பது பெறப்படுகிறது.

இந்நூல் சிவாகம நெறியில் அமைந்துள்ளமையால் இதன் கண் கூறப்பட்டுள்ள பொருள்கள் அவ்வாகம நெறிக்குரிய சூத்திரப் பொருள்களாக விளங்குகின்றன அவை:

சயம்பு சூத்திரப் பொருள் 2, 3, 33-35

மிருகேந்திர சூத்திரப் பொருள் 4, 11, 14, 16-23, 27, 29, 31, 32, 36-38, 48-50, 57-58, 71, 74

பார்க்ஷ சூத்திரப் பொருள் 5, 8, 15, 42, 43, 46, 74, 65, 66

மதங்க சூத்திரப் பொருள் 6, 9, 10, 59-61, 76, 77, 79

விசுவசாரோத்திர சூத்திரப் பொருள் 7, 24-26, 30

காரண சூத்திரப் பொருள் 12, 13

கிரண சூத்திரப் பொருள் 28, 39-41, 44, 68, 69 93-95

சுவாயம்புவ சூத்திரப் பொருள் 45, 51-56, 62, 75, 80, 83-86, 92

சருவாசி ஞானோத்தரப் பொருள் 63

நிசுவாச காரிகா சூத்திரப் பொருள் 67, 82

காலோத்திர சூத்திரப் பொருள் 73,

தேவிகாமத சூத்திரப் பொருள் 78, 96, 97

தேவிகாலோத்திர சூத்திரப் பொருள் 87

என்பன அச் சூத்திரப் பொருண்மைகளாகும்.

சைவ ஆகம நெறிகள் கூறும் சித்தாந்தக் கருத்துகளைச் சிவ ஞான போதம் பன்னிரு சூத்திரங்களில் பகுத்துக் காட்டுகின்றது. அவையாவன 1. பதியுண்மை 2. பாசவுண்மை 3. பசுவுண்மை 4. பசு இலக்கணம் 5. பாச இலக்கணம் 6. பதி இலக்கணம் 7. ஆன்மாவின் சிறப்பிலக்கணம் 8. ஞானத்தின் உணரும் முறை 9. ஆன்ம சுத்தி 10. பாசம் நீக்க உணர்த்ததார் 11. சிவப்பேறு 12. அணைந்தோர் தன்மை ஆகியன

இவ்வாறு சைவசித்தந்தக் கருத்துகளைத் தெளிவுறுத்தும் நிலையில் சிவஞான போதம் முதலானவற்றோடு இச்சதமணி மாலையும் சிறந்தோர் ஆன்மத் தென்பொருள் நூலாக விளங்குகின்றது.

## நடை

நூலின் நடை மிக்க இனிய நடையில் அமைந்துள்ளது. மிக அரிய ஞானக் கருத்துக்களை எளிய முறையில் விளக்குகின்றது. எனினும் சைவ ஆன்ம நெறியில் நின்று விளக்குதலின் இதன் கண் வடமொழிச் சொற்கள் பல இடம் பெற்றுள்ளன. எனினும் அவ்வட சொற்கள் யாவும் தமிழுக்கேற்ப ஒலிமாற்றம் பெற்று விளங்குகின்றன.

நூலினுள் ஓர் (ஒரு) வடமொழி எழுத்தும் இடம் பெறாமை குறிப்பிடற் குரியது; பாராட்டுதற்குரியது.

சான்று:

| | | | |
|---|---|---|---|
| தீட்சை | - | தீக்கை | (1:3) |
| சக்தி | - | சத்தி | (9:1) |
| சிற்பரம் | - | சிதாகாசம் | (9:2) |
| சூட்சுமம் | - | சூக்குமம் | (25:2) |

மேலும் சுத்தம், அசுத்தம், பரிணாமம் என்றினைய வட சொற்கள் மிகுந்து காணப்படுகின்றன.

வடசொற் பயன்பாடு மட்டுமன்றி, பேச்சுவழக்குச் சொற்களும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

சான்று

| | | | |
|---|---|---|---|
| ஒருவர் | - | ஒருத்தர் | (8:2) |
| பின்தொடரும் | - | பின்றுடரும் | (22:2) |
| தொடர்ந்து | - | துடர்ந்து | (24:2) |

அணிகள்

நூலில் அழகிய உவமைகள் கையாளப் பெற்று நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

சான்றாக, இவ்வுயிரானது புவியில் பாசத்தில் அழுந்தியுள்ளதால் மோசத்துயில் கொண்டு இறைவனை அறியாமல் இறைவனுக்கு முன்னே உறங்குகின்றது. இறைவன் அவ்வுயிர்க்கு உரிய முறையால் உணர்த்தி மோசத் துயில் நீக்குவான் இதனை ஆசிரியர் முன்ன கூறுகின்ற

மாணவனை அவ்வாசிரியர் கோல்கொண்டு உணர்த்தித் துயில் நீக்கும் இயல்பான நிகழ்ச்சி உவமையாக்கப் பட்டுள்ளது. (பா. 68) இவ்வுவமை போல என்னும் என்னும் உவம உருபு இன்றி ~~அமைந்த~~ எடுத்துக் காட்டு உவமையாகத் திகழ்கின்றது. இவ்வெடுத்துக் காட்டு உவமையினைத் தொல்காப்பியர் சுட்டிக்கூறா உவமம் என்று குறிப்பிடுதல் இவண் சுட்டத் தக்கது.

அவ்வாறே சக்தியின் ஆற்றலை மருந்தோடு ஒப்பிட்டுக் காட்டும் உவமையும் நூலில் இடம் பெற்றுள்ளது (பா. 69)

பாசம் முதலியவற்றை நீக்கி உயிரைச் சுட்ட விதையோடு ஒப்புமை கூறும் சிவாகமக் கருத்தை இந்நூல் நன்முறையில் விளக்குகின்றது. விதையை முளைக்குந் தன்மை இறக்கச் செய்த நிலையே சுட்டவிதையாம். அவ்வாறே உயிர் பிறவி எடுத்தற்குக் காரணமான பாசம் முதலியவற்றை நீக்கிய நிலையே ஞான மெய்தும் நிலை. இவ்வாறு ஆகமம் சுட்டும் உவமையையும் நூல் ஏற்று அழகுறக் கையாண்டுள்ளது.

நூலின்கண் சிவபெருமானைச் சுட்டுமிடத்து இடம் பெறும் அடைமொழிகள் அச் சிவபெருமான் உருவைப்புலப் படுத்துவனவாக உள்ளன.

'முச்சுடர் விழியுடை முதல்வன்' (48:4) என்ற வழி அச்சிவன் மூன்றாவது கண்ணாக நெற்றிக் கண்ணையும் பெற்று விளங்குதல் சுட்டப்படுகிறது. இவன் உமாதேவியைத் தன் இடப் பாகத்திலேயே கொண்டு மாதொருபங்கனாக விளங்குவதை 'பாகுமென் மொழியமர் பாகன்' (54:4) என்ற வரி உணர்த்துகின்றது. அவருடைய சடையழகைச் செஞ்சடைப் பகவன் (74:4) என்ற அடை குறிப்பிடுகின்றது.

அரவணி கடவுள் என்ற குறிப்பில் அவன் பாம்புகளை அணிகலனாகக் கொண்ட தன்மை புலப்படுகின்றது. சிவபெருமான், பாற்கடலில் பிறந்த நஞ்சை உண்டு கண்டத்துக் கறுத்தப்புள்ளியாக விளங்குவது 'அருண்ட முண்டவன்' என்று ஆசிரியரால் சுட்டப்பட்டுள்ளது. மேலும் கள்ளுறையே தலைமாலையாக அவனுக்கு அணிசெய்யுந் திறம் 'திங்களின் கண்ணி பெய்ந்த செஞ்சடைப் பகவன்' (74:4) என்ற அடி அழகுற விளக்குகின்றது இவ்வாறு சிவனுடைய ஆகமத்தைக் குறிப்பிடுந்தோறும் அவனுடைய தோற்றம் புலப்படுமாறு நூல் யாக்கப் பெற்றுள்ளது. பசுவாகிய ஆன்மா பதியாகிய இறைவனை அடைதற்குரிய நெறியைக் கூறும் நூல் பொருளில் அப்பதியின் தோற்றம் சொல்லோவியங்களாக வரைந்து உணர்த்தப் பெறும் நயம் நினையுந்தோறும் மகிழ்ந்து போற்றதற்குரியது மேலும் நூலின் கண்

முதிரொளிப் படிவம் (21:2)

ஐசலாமுயிர் (39:2)

மதிகூர் (45:4)

விமலஞானம் (74:1)

இருள் மலம் (93:3)

என்றினைய புது சொல்லாட்சிகள் அழகுற அமைந்து நூலுக்கு அழகு பயக்கின்றன.

## நூற்பயன்

விநாயகரை வணங்கித் தொடங்குகின்ற இந்நூலின் பயனை நூலின் தொன்னூற்றொன்பதாம் பாடல் குறிப்பிடுகின்றது. உயிர்களுக்கு நல்வழி ஆற்றும் இச் சதமணிமாலையைப் பக்தியுடன் போற்றி ஓதிப் பொருள் உணர்ந்தோர் மும்மலத்தின் மூலமலத்தைப் போக்கி ஞானச்சுடரினை எப்போதும் காண்பர். எனவே பசுவாகிய உயிர் பாசத்தை நீக்கிப் பதியை அடைதலாகிய சைவசித்தாந்த முழுமைப் பொருளே இந்நூலின் நோக்கமும் பயனுமாகும்.

## முடிவுரை

சைவாகமத்தின் தெளிபொருளாக விளங்குவது சதமணிமாலை மாலை இலக்கிய வகையுள் ஒன்றான சிற்றிலக்கியமாக இந்நூல் வடிவில் விளங்கினாலும் உயிர்கள் இறைவனை அடையும் வழியைக் கூறும் பொருண்மையால் பேரிலக்கியமாகப் போற்றத் தக்கது. நூலின் பொருண்மையைப் போன்றே நூலின் நடை, நயம், சொல்லாட்சி அணி நலன்களும் நன்கமைந்து நூலுக்குப் பெருமை சேர்த்துப் பேரிலக்கியமாக மிளிரச் செய்கின்றன. எனவே, இதுகாறும் கண்டவற்றால் இலக்கிய இன்பத்தின் வழியே உயிர்க்குரிய நிலையான இன்பத்தை அடைய வழிகாட்டும் பெரிய நூல் இச் சதமணிமாலை ஆகும்.

# நூற் பொருள்

## சிறப்புப் பாயிரம்:

இனியனவாகிய ஞானதீக்கைகளை யான் உரைக்கிற்பன்; ஒருங்கிய மனமுடைய அறிஞர்கள் கேண்மின்! என்று கூறும் முதற் தோன்றி (பாடல்)
"தோற்றித் திறைபல முடிப்பினும் - தான் தன்புகழ்தல் தகுதியன்றே"
என்னும் இலக்கணத்திற்கு மாறாக- பாடல் வடிவில் சிறப்புப் பாயிரம் ஒன்று குறிப்பிடப்பெற்றுள்ளது. 'இவையே சைவசித்தாந்தம் அநாதி என்று கூறும் பதி, பசு, பாசம் என்பவற்றுள் பாசம் என்பதைக் குறிக்கும் ஆணவம், கன்மம், மாயை என்பனவாகலாம். (பதி- இறை; பசு - உயிர்; பாசம் - கட்டு) யான் கூறுகிறேன் கேளுங்கள் என்பது தற்புகழ்ச்சியென்னும் குற்றத்தின்பாற்படுமா? இல்லை.
எல்லாம் வல்லவனாகிய சிவபெருமானையும், என் குருதேவரையும் தொழுது உரை செய்கிறேன் என்றே சிறப்புப் பாயிரத்தைத் தொடங்குவதால், அவர்களின் திருவருள் துணை நிற்க, தோன்றுகின்றது என் உரை என்பதனால் இக்கூற்று தற்புகழ்ச்சி என்னும் குற்றத்தின் படாது என்பதே சிறப்பு.

## கூறப்பெறும் பொருள்

சித்தத்துவத்தைக் கூறுகிறார் ஆசிரியர் இத்தத்துவம் கூறக் காரணம் யாது? இந்நிலவுலகத்து நிலைபெறும் உயிர்கள் மலம், மாயை, வல்வினை என்னும் மும்மலங்களைப் பிறவியிலேயே பெற்றுத் தோன்றுகின்றன. 'இவையே சைவசித்தாந்தம் அநாதியென்று கூறும் பதி, பசு, பாசம்

என்பவற்றுள் பாசம் என்பதைக் குறிக்கும் ஆணவம், கன்மம், மாயை என்பனவாகலாம். (பதி - இறை; பசு - உயிர்; பாசம் - கட்டு) 'பிறவிப்பயனான உயர் நிலையடைய வேண்டுமாயின் அம் மும்மலங்களை அறுத்து நீக்குதல் வேண்டும். அம்மலங்களையகற்றும் வழிவகைகளைக் கூறுவதே சிவதத்துவம் எனவே தான் சிவதத்துவங் கூறத் தொடங்குவதாகக் கூறுகிறார்.

அந்தத் தத்துவத்தை அறிதலால் ஏற்படும் பயன் என்ன? சிவதத்துவத்தினால் ஏற்படும் இயல்பான உயர்ந்த ஞானத்தால் பரசிவன் தன்மையறிய முடியும். அந்த ஞானமே அவனிடத்தது ஆகும்.

## 2,3 மெய்யறிவு வகை

சிவதத்துவத்தால் உணரப்பெறுவது ஞானமான மெய்யறிவு. அதுவே மும்மலங்களை அறுக்க வல்லது. பரம்பொருளை யறிந்து இன்புறுதற்காம் வழியைக் கூறுவது. அந்த மெய்யறிவு இரு வகைப் படும். அவை முறையே பரம், அபரம் எனப் பெறும். இவற்றுள் உலகத்திற்கு இன்பமளித்து இவ்வுலகப் பொருள்களை உணர்தற்கு அடிப்படையாக அமையும் பல வகைக் கலைகள் அபரஞானம் என்பவை; அக்கலைகளே அபரஞானம் எனப் பெறுவன. ஆனால் பிறவிப் பயனை அளித்து, மும்மலங்களை அறுத்து உயர்வடையச் செய்வதாகிய இறையுணர்வே பரம் அல்லது பரஞானம் எனப் பெறுகிறது.

## கலைகளில் உயர்ந்தது மெய்யறிவுக் கலை

பரம் பொருளாகிய இறைவனால் தோற்றுவிக்கப் பெற்றதே உலகம் அவ்வுலகத்து உயிர்களும் அவன் படைப்பே. படைப்புக்கடவுளாகிய இறைவன் உலக உயிர்களை - சிறப்பாக மக்கள் உயிரைப் படைக்குங் காலத்திலேயே - ஐயறிவைப்படைத்த மக்களை உருவாக்கிய இறைவன், ஐயறிவுக்கு ஏற்பத்தம் ஐந்து முகங்களின் இயல்பால் உயிருக்கு ஏற்படும் பயன்களைக் குறித்த செய்திகளை எடுத்து உரை செய்தனன். இவை து இது - தீயது இது எனவும், ஐயந்திரிபு ஐயமயற்றது இது எனவும் பகுத்தறிந்து அதற்கேற்ப உலக வாழ்க்கையை நடத்தும் திறமை பெறுவதே உயர்ந்த கலையாகும். இக்கலையே இறைவன் உரை செய்த உயர்கலையாகும். இதுவே ஞானம் எனப் பெறுகிறது.

## பா. 5

சிவநெறிகளையும் சைவ ஒழுக்கங்களையும் மேற்கொண்டொழுகும் உள்ளமே சிவநிலமாகும். அந்தச் சிவநிலமாகிய உள்ளத்துச் சிறப்பினைப் பலருமறியக் கூறுவதே இறைவன் அருளிய உயர்கலையாகிய ஞானத்தின் பொருளாகும். அக்கலையின் ஒருகூறு பவமறு மருந்தை உணர்த்துதலாகும். பிறப்பை அறுத்தலும் அந்தப் பிறப்புக்குக் காரணமான பாவத்தை ஒழித்தலும் அக்கலையின் முதற் படியாகும். அழிவுக்குக் காரணமான தீச் செயல்களை விட்டு நீக்குதலும் அதன் பயனாய் மேன்மையும் நிலையான புகழும் பெறுதலும், இதன் அடுத்த படிநிலையாகும்.

இந்தப் பன்மறை மருந்தாகிய உயர்கலையை உணர்ந்து ஒழுகுவதனால் நிலை பரத்தை அறிதலே சிவநிலையாகிய உளத்தச் சிறப்பாகும். அந்தச் சிறப்பு உள்ளத்தை நிலையாகப் பெற்று விளங்குவதே பிறவியின் பயனாகும்.

பா. 6

செயலும் அச்செயலின் விளைவும் ஒன்றோடொன்று தொடர்புடையன. எனினும் இரண்டும் ஒன்றல்ல. அவை வெவ்வேறாம். செயலும் செயலின் விளைவும், முறையே தருமம், தருமியும் எனப் பெறுகின்றன. உள்ளத்தைச் சார்ந்து விளங்குவது, தருமம், அந்த உள்ளத்தின் பயனாய் விளையும் தருமியும் அத்தருமத்தின் வேறுபட்டு விளங்குவதாகும். இவ்வாறே காரணம் வேறு, அக்காரணத்தால் நேரும் காரியம் வேறு; காரியம் வேறு, அக்காரியத்தின் மூலமாக விளக்கும், தெளிக்கும் உரை வேறு; அவ்வுரையாற் பெறும் அறிவு வேறு. எனவே தருமம் ஓரிடத்ததாகத் தருமியும் பிறிதோரிடத்து நிற்கும்; காரணம் ஓரிடத்ததாகக் காரியம் பிறிதோரிடத்தது ஆகும். இதை மறுதலையாக நோக்க, காரியம் ஓரிடத்ததெனின் காரணம் பிறிதோரிடத்தது. உரை ஓரிடம், அவ்வுரையால் பெறும் அறிவுத்தெளிவு பிறிதோரிடம்.

பா. 7

மாயை அழிவற்றது. அவ்வழிவில்லாத மாயையை மூலமாகக்

கொண்டே அழிவற்ற இவ்வுலகமுந் தோன்றியுள்ளது. இவ்வுலகக் காணும் யாவும் வடிவும் நிறைவும் உடையன. இச் பொருள்களாகிய கருவுக்குக் கருத்தாவாக விளங்குபவன் பதி என்ற மொழியைப் பெறும் இறைவன்.

பா. 8

பிறரால் கெடுத்தற்கு இயலாதது உயரிய ஞானமெனும் கிரியை யாகும். அதனைப் பெற்றுப் பிறரால் கொடுக்கப் படாத வாழ்வை உடையவன், யாரெனக் காண்போமானால் அவனே இறைவன். அத்தகையவன் நடுத்தற்கரிய மெய்வலி ஞானவலி ஆகிய இரு வலிமை களையும் தன்னகத்தே பெற்றவன்; எங்கும் நிறைந்து விளங்குபவன்; அவனே ஈசன் எனப்படுவன்.

பா. 9

தன்னுடைய வாழிடம் அதிட்டானமாகிய கோயில். தன்னுடைய சீர் எனப்படும் பெரும்பொருள் பரை எனப்படும் சக்தியாவாள். முதிர்ந்த ஒளிப்பிழம்பே தன்னுடைய வடிவம் என்ற இத்தன்மைகளைப் பெற்று விளங்குபவன் ஈசன். அவன் எல்லையற்ற, பரந்த வெளியின் சிறிதும் நடுக்கமோ அசைவோயின்றி நிலையாக விளங்குகின்ற மூர்த்தி என்று பலவாறு துதிக்கப்படுவான். பதி, பசு, பாசம் என்ற மூன்றனுள் அவனே பதியாக விளங்குபவன் என்று சிவாகம நூல்வல்லோர் கூறுவர்.

பா. 10

விருதற்கரிய மறைப்புத் தன்மையை உடையதாய், யாவற்றுக்கும் மேலானதாய், யாவற்றிலும் தனியதாய் விளங்கும் தன்மையொடு எண்திசைகளே முகங்களாகக் கொண்டு விளங்குகின்ற சக்தி, முதல், நடு, இறுதி என்கின்ற தன்மைகள் யாவும் பெறாமல் 'உள்ளது' என்ற அளவில் அறியப்படும் சக்தி. யாவற்றிலும் நீங்காது உறைகின்ற சக்தி. அதுவே சாந்த சக்தி எனப்படும். இச்சக்தி முன்னர் யாவராலும் போற்றப் பெற்றது. அதுவே பதியாகிய குரு என்றவாறு நிலைபெற்று விளங்குவது ஆகும்.

பா. 11

இறைவன் பாசம் முதலான மலங்கள் அற்றவன். அமலன் என்று போற்றப்படுபவன். அவனுடைய உருவம் இன்னது என்று அறிதற்கு அரியதாகும். இத்தகைய அரிய தன்மையைப் பெற்றுள்ளமையால் அவனே மருவிய உருவில் நின்று உயிர்களுக்கு வகுக்கப்பட்டுள்ள எவ்வகைச் செயலையும் செய்கின்றான். எனவே உலகில் நடைபெறும் செயல்கள் அனைத்தும் அவனுடைய செயலே. அவனால் வழங்கப்பெற்ற உயிர்கள் ~~பெற்றுள்ள~~ உருவங்களினால் செய்யப்படுவதன்று. எனவே யாவும் அவன் செயலே என்பது தேற்றம்.

பா. 12

சிவாகம நோக்கில் சக்தியைச் சார்ந்து நிகழ்கின்ற செயலாகிய

காரணமும் வேறுவேறு என்று எண்ணுவதற்கில்லை. செயல்நிகழ்கின்ற நிலை சித்து. செயலேதும் நிகழாத அசைவற்ற நிலை அசித்து. சித்திலிருந்து அசித்து வேறுபடுமாறுபோல சக்தியின் நிலை அறியப்படுவதில்லை, சக்தியின் இத்தன்மையினால் இயங்கும் தன்மையுள்ள வேகம் என்ற காரணம் பல்வினைகளின் காரணமாக ஞானக் கிரியையோடு மருவி மயங்கி நிற்கும்.

பா. 13

இறைவன் உருவில்லாதிருந்தும் அனைத்துயிர்களுக்கும் உதவுகின்ற பயனைக்காண்பது போன்று அவ்வடிவற்ற இறைவனே பரந்த இவ்வுலகத்தைத் தன்னுடைய இச்சையால் படைக்கின்றான் என்று மலத்தை நீக்கிய பெருஞ்சீர்மை உடையவர்கள் உரைப்பர். எனவே இவ்வுலகம் இறைவனுடைய இச்சையினால் படைக்கப்பெற்றது என்பது தெளிவு. இறைவன் இவ்வுலகைப் படைத்தற்கு, உயிர்களைப் படைத்தும் காத்தும் அழித்தும் அவன் நிகழ்த்துகின்ற செயல்களுக்கு உரிய காரணத்தை ஆராய்ந்த கம்பர் அதற்கு விளக்கம் காணவியலா நிலையில் அதனை 'அலகிலா விளையாட்டு' என்று குறிப்பிட்டமை ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே

என்பது அப்பாடல்

பா. 14

சத்தன், உத்தன், ருத்தன் என மூர்த்திமாக ஈசன் விளங்குகின்றான். அவ்வீசனால் மொழியப்பெற்ற இறைபேதம், சத்தியின் பேதம் ஆகியவற்றை அவனே தன்னாற்றால் சாரமாக வைத்தது என்று உரைப்பர் வேதநூல்களோடு ஆகம நூல்களும் வல்லோர்.

பா. 15

இறைவன் எரி என்னும் அழலின் காரணமாகவே ஈசன் எனும் பெயர்பெற்றான் என்பர். அவனே காரணப் பொருளாக விளங்குகின்றான். காரியங்கள் தோறும் கலந்து நின்று காணப்படுவதாக இங்கு சீரியத் தனையாகவும் விளங்கும் தட்பம் பொருந்திய ஓரியல்பைப் பெற்று விளங்குவதே அக்காரணம்.

பா. 16

பற்பலவாகிய வடிவங்கள் எய்தப்படும் பொருளாகி எவற்றையும் தோன்றி நிற்கின்ற அவையனைத்தன் ஆகி நிகழ்கின்ற மதி உடையது காரணம் ஆகும். இதனையே இம் முறைமையினாலேயே உணர்வின் மிக்க இறைவனாக பொருந்துவது என்பர். இதனால் இறைவனே காரணப் பொருளாக விளங்குகின்றான் என்பது வலியுறுத்தப் பெறுகிறது.

பா. 17

இறைவன் ஐம்பெரும் தொழில்களைப் புரிகின்றான். இவ்வுலகத்தைப் படைத்தல், பாதுகாத்தல், அழித்தல், மறைத்தல், பாசம் முதலியவற்றை விடுத்தல் என்பனவே அவ் ஐம்பெரும் தொழில்களாம். பயன்படு வினைகள் என்று கூறப்படுகின்றனவாகி தடையேதுமின்றி இயற்றப் பெறுகின்ற இவ்வைந்து தொழில்களும் இறைவனின் ஒரு பெரும் தொழிலாகும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களோடு இறைவனின் செயல்கள் முடிவதில்லை. அவை மேலும் மறைப்பு, விடுப்பு என்ற இரு தொழில்களோடு இணைந்து ஐந்தொழில்களாகின்றன. பதியைப் போன்றே பாசமும் அநாதி பந்திக்கின்ற பாசம் நீங்கும் வரை உடல் அழியுந்தொறும் புதுப் பிறவிகள் தோன்றிக் கொண்டே இருக்கும். பாசத்தை இறைவன் விலக்கும் நிலையிலேயே பிறவிக்குள்ள மறைப்பு நீங்கி விடுப்பு நிகழும். பசுவாகிய ஆன்மா இறைவனைச் சேரும். இவ்வாறு ஐந்தொழில்கள் இறைவனால் நிகழ்த்தப்படுகின்றன.

பா. 18

விடுப்பு என்னும் தொழில் ஒடுக்கும் என்று கூறப்படும். இறைவன் இவ்வொடுக்கத்தை, பாசத்தை ஒழித்தோர்க்கு மட்டுமே அருளுவான். மற்றவர்க்கு அவர்தம் வினைப்பயன் காரணமாக மேலும் வினைகள் தொடரும் வண்ணம் பிறவிகள் தொடருமாறு மாயா சக்தியை அமைப்பான்.

அவ்வுயிர்கள் வினைகள் யாவற்றையும் கடந்து அவற்றில் அழுந்தாமல் நீங்கும் வரை பரமன் பார்த்திருப்பான். எனவே படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றும் உலக உயிர்கள் அனைத்திற்கும் பொதுவாகும். ஒடுக்கம் பாசத்தை ஒழித்தவர்க்கே கிட்டும். ஏனையோருக்கு மறைப்பாம் தொழிலால் வினைகள் தொடர்ந்து கொண்டே யிருக்கும்.

பா. 19

வினை முதல்வனாகிய இறைவனைத் தன்னகத்தே உடையவன் பசு எனப்படுவான். அப்பசுவாகிய உயிரை இறைவன் மாயையில் ~~வினையில்~~ அழுத்தும் நிலையில் அப்பசு தனக்கு அன்னியமான ஓர் உடம்பினைப் பெற்று உலக உயிராகிறான். இந்நிலையில் தாம் பெற்ற அவ்வுடம்பிற்கு அழிவில்லை என்ற எண்ணம் அவனிடத்தில் தோன்றுகிறது. இந்நிலையில் அவன் சிற்றறிவாளன் எனப்படுகிறான். மூன்றும் அவன் ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்களைச் சேர்ந்த வழி பெரிய வியாபகன், அசடன் என்ற நிலைகளைப் பெற்று தன்னுடைய வினையை நுகரத் தலைப்படுகிறான்.

பா. 20

ஆதியும் அந்தமும் இல்லாத பாசத்தினால் மாண்ட மலங்களைச் சார்ந்த பசுத்துவம் என்னும் தன்மையை அறிவோர் உரைப்பர். இப்பிறவிகளுக்குக் காரணமானது மாயை, இதனை விதையோடு உவமிப்பர். விதை முளைத்தெழு ~~முளைக்~~கும் தன்மை வாய்ந்தது. அம்[illegible]முளைத்தச் செடியின்

மேலும் பலவினைகள் உண்டாகி அவ்வாறே பல்கிப் பெருகும். அவ்வினையைச் சுட்டு, தவிடும் உமியும் நீக்கிய வழி அது முளைக்கும் தன்மையை இழக்கிறது. அவ்வினையைத் கபால பிறவிகள் தொடர்வதற்குக் காரணமான பாசம் முதலியவற்றை விலக்குவதனால், ஒடுக்குவதனால் பிறவிகளை ஒழித்து இறைவனோடு ஒன்ற இயலும். இதற்குரிய வழி வகைகளைக் கூறுவதே சைவ சமயம் ஆகும்.

பா. 21

